IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 248/2021

சாட்சி : PW3

பெயர் : சுபாஷ் தேதி: 12-03-2025

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

பிரதிவாதியை எனக்கு தெரியும். அவருக்கு 70 வயது இருக்கும். நான் சாட்சி கையெழுத்து போட்ட பத்திரம் சரவணன் பெயரில் வாங்கப்பட்டது. தாதக்காப்பட்டியில் வாங்கப்பட்டது, குறிப்பாக வாங்கிய இடம் தெரியாது. விலை பேசும் போது நான் உடன் இல்லை. கிரய உடன்படிக்கை சொத்தை நான் பார்க்கவில்லை. வாதியும், பிரதிவாதியும் பங்காளி உறவினர்கள். வாதி, பிரதிவாதிக்கு இடையே கொடுக்கல் வாங்கல் பற்றி எனக்கு தெரியாது. நான் மூன்று பக்கத்தில் கையெழுத்து போட்டேன். கிரய உடன்படிக்கை ஏற்பட்ட சமயத்தில் கொரோனா நோய் தொற்று சமயம் என்று சொன்னால் சரியல்ல. 24.06.2020 முழு ஊரடங்காக இருந்தது என்று சொன்னால் சரியல்ல. ஊரடங்கை நீக்கி விட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 100 ரூபாய் நோட்டுக்களாக ரூ. 8,00,000/- கொடுத்தார்கள். நான் பார்த்தேன். பிரதிவாதியுடன் அன்று முருகன் இருந்தார். முருகனிடம் சாட்சி கையெழுத்து வாங்கவில்லை. நான் சொல்வது போல் கிரய உடன்படிக்கை ஏற்படாததால் தான் முருகனிடம் சாட்சி கையெழுத்து வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி, பிரதிவாதிகளிடையே கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக பிரதிவாதியின் கையெழுத்தை வெற்று பத்திரத்தில் வாதி வாங்கி வைத்திருந்தார் என்றும், அதை வைத்து வா.த.சா.ஆ-A1 கிரய உடன்படிக்கை தயாரித்து கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ-A1 கிரய

உடன்படிக்கையில் கிரய உடன்படிக்கை காலம் எவ்வளவு காலம் என்று எனக்கு தெரியாது. என் மூலமாக பிரதிவாதி கிரயம் செய்து கொடுக்க அழைக்கவில்லை. வா.த.சா.ஆ– A1 கிரய உடன்படிக்கையில் உள்ள விவரங்கள் எனக்கு படித்து காண்பிக்கவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் கிரய உடன்படிக்கை ஏற்படுத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வாதியின் உறவினர் என்பதால் வாதிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.